★ அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் நடவடிக்கை

# மடு அகதி முகாமுக்கு உணவு அனுப்ப ஏற்பாடு

மடுவில் உள்ள அகதிகளுக்குரிய உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை மீண்டும் அங்கு அனுப்பி வைக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு நியமித்த தனிநபர் ஆணைக் குழுவின் முடிவு அறிவிக்கப்பட முன்னதாகவே இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக இந்த உயர் ஸ்தானிகராலய வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை அரசின் நடவடிக்கைகளால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதாலேயே தாம் இந்த ஏற்பாடுகளைச் செய்வதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. வவுனியாவில் வைத்து இந்த நிறுவனத்தின் லொறி மீது படையினர் சுட்டதில் அதன் சாரதி காயமடைந்ததையடுத்து மடுவுக்கான உணவு விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 74


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 168 பிரசோற்பத்தி வைகாசி 01 (15-05-1991) புதன்


ஓமந்தைப் பகுதியில் நிலைகொண்டிருந்த

# படையினர் 2 நாள் மோதலின் பின் பேயாடிகுளத்திற்கு பின்வாங்கினர்

## 50 இற்கும் மேற்பட்ட படையினர் பலி 20 போராளிகள் வீரமரணம்

வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம், கோழிய குளம், பெரிய பூவரசம் குளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம், ஆகிய பகுதிகளில் தரித்து நின்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது கடந்த ஞாயிறன்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

காலை முதல் மாலை ஆறு மணிவரை நடைபெற்றமோதலையடுத்து படையினர் ஓமந்தைக்கு அடித்து விரட்டப்பட்டனர். இத்தாக்குதலில் இருபது விடுதலைப்புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

மீண்டும் மறுநாள் காலை 7.30 மணியளவில் ஓமந்தையில் நின்றிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து படையினர் பிற்பகல் நான்கு மணியளவில் பின்வாங்கி பேயாடி கூளாங்குளத்திற்கு சென்று விட்டனர்.

இந்த இருநாள் கடும் மோதல்களின் போது 50 இற்கும் மேற்பட்டபடையினர் பலியானதுடன் பலர் காயமடைந்தனர். படையினரின் இரு கவச வாகனங்களும் பலத்த சேதமடைந்தன. 71

## வீரமரணமடைந்த வேங்கைகள்

லெப். கலிரோ - இராசம்பு விமலநாதன் மூதூர், 2 லெப். தேன் - சுந்தரலிங்கம் விமலச்சந்திரன் மணலாறு, 2லெப். ஜெனா -யோகநாதன் பிரான்சிஸ் மன்னார், 2லெப். மன்டேலா - தமிழ்ச்செல்வன் தமிழகன் யாழ்ப்பாணம், 2லெப். வியாசன் - காராளசிங்கம் விக்கினேஸ்வரன் வவுனியா, 2லெப். ரியூட்டர்-த.ஜெறோமியன் நல்லூர் 2லெப். செட்டி பெரியசாமி ஜோகேஸ்வரன் அலம்பில், 2லெப். நிச்சாம் சித்திரவேல் நாகேந்திரன் மூதூர், 2லெப். அலோ

—04 ஆம் பக்கம் பார்க்க

யுத்த நிறுத்தம் அமுல் செய்து

## புலிகளுடன் பேச்சு நடாத்த அரசு முயற்சி எடுக்கிறது!

இம்மாத இறுதியில் வடக்கு கிழக்கு பகுதியில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக அரசு விடுதலைப்புலிகளுடன் உயர் மட்டத் தொடர்பை உருவாக்க முயன்று வருவதாகவும் இதற்காக செல்வாக்குள்ள அரசின் தூதுவர்கள் இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லலாம் எனவும் இந்திய வானொலி நேற்று தெரிவித்தது.

விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தவும் பேச்சுவார்த்தைகளை தொடங்கவும் அரசு தனது நிபந்தனைகளை தளர்த்தவும் முன்வந்துள்ளதாம் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்ற தனது பழைய கடும் நிபந்தனையை தளர்த்தவும் ஸ்ரீலங்கா அரசு முன்வந்துள்ளதாக இந்திய வானொலி மேலும் தெரிவித்தது

## பலாலியிலிருந்து ஷெல் வீச்சு வல்வெட்டியில் சிறுவன் பலி

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை வல்வெட்டித்துறை நோக்கி ஷெல் தாக்குதல் நடைபெற்றது.

நான்கு ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் விளையாடிக் கொண்டிருந்த வே. வரம்சோதி (14) என்ற சிறுவன் பலியானான் ஏழு பொது மக்கள் காயமடைந்தனர், 71

## பிரிட்டிஷ் தூதுவர் அரசு உறவில் விரிசல் நிலை

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் முறைகேடு என பிரிட்டிஷ் தூதுவர் டேவிற் கிளட்ஸ்ரோன் செய்த புகாரையடுத்து அவருக்கும் அரசுக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவர் இடம் மாற்றப்பட்டு புதிய தூதுவர் ஒருவர் இங்கு வரலாம் என கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

40— ஆம் பக்கம் பார்க்க

## உன்னிச்சை மிதிவெடியில் சிப்பாய்கள் காலிழப்பு

மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சை, ஆறாம் கட்டை ஆகிய இடங்களில் தேடுதல் நடாத்திய படையினரில் இருவர் மிதிவெடியில் சிக்கி காலிழந்தனர்.

கடந்த சனியன்று நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்து அங்குள்ள 12 தமிழரின் வீடுகளை படையினர் எரித்தனர். சில பொதுமக்களையும் கைது செய்து தாக்கினர். 71

## ஒழுங்கான தேர்தலாம்

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் ஒழுங்கான முறையில் நடைபெற்றதாக தேர்தலை கண்காணித்த வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

## 36 மணிநேர ஊரடங்கு

யாழ் குடாநாட்டுப் பகுதியில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. இன்று மாலை வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நவசமசமாஜக்கட்சி வேட்பாளர் பொலிஸாரால் கைது

பெண்மணி ஒருவரை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டு நவசமசமாஜக்கட்சிவேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நவசமசமாஜக்கட்சி அரசுக்கு தனது கண்டனத்தைத் தெரி

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு மாநகர மேயராக கணேசலிங்கம் தெரிவாவார்?

கொழும்பு மாநகர முதல்வராக ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் கே. கணேசலிங்கம் தெரிவு செய்யப்படுவாரா என்பது குறித்து நாளை முடிவு எடுக்கப்படும்.

ஐக்கியதேசிய கட்சியின் தலைமை அலுவலகமான ஸ்ரீகோதாவில் நடைபெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் இந்த முடிவு தெரியும் எனத் தெரியவருகிறது.

## கடற்கரும் புலிகளின் எழுச்சி விழா குடாநாட்டில் இடம்பெற்றது

பல இடங்களில் கடற்கரும் புலிகளான காந்தருபன், வினோத், கொலின்ஸ், ஜெயந்தன், சிதம்பரம் ஆகியோரின் உருவப்படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை இவர்களது எழுச்சிக் கூட்டங்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்திலும், வல்வெட்டித்துறை தெடியகாடு இளைஞர் கழக மைதானத்திலும் மட்டுவில் சரஸ்வதி மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும்நடைபெற்றது.48ப-10

## யானைகள் இரவில் அட்டகாசம்

கண்டாவளைப் பகுதியில் உள்ள புதிய புன்னை நீராவி கிராமசேவகர் பிரிவில் தினமும் இரவு நேரம் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது,

இவை கூட்டமாக வந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்நாடு தேர்தல் களம் அமர்க்களப் படத் தொடங்கி விட்டது. அங்குள்ள இரண்டுமுக்கிய கூட்டணிகளுக்குள்ளேயும் தொகுதிகளைப் பங்கீடு செய்வதில் இழுபறிகள் தோன்றியுள்ளன. இது பற்றி FRONT LINEஇல் சி. இராவகன் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகளைத் தருகிறோம்.

# தமிழ் நாடு அரசு கலைப்பை ராஜீவ் விரும்பவில்லையா?

இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன் இணைந்து செயற்பட்ட கட்சிகள், தொகுதி ஒதுக்கீடு விடயம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதும், ஒன்றோடு ஒன்று மோத ஆரம்பித்துள்ளன என இணைந்த கட்சிகளுக்கிடையேயே அபிப்பிராய பேதமும் மனக்கசப்பும் தோன்றியுள்ளன.

"தொகுதிகளைப் பகிர்வதென்பது சட்டசபைத் தேர்தலுக்கு மட்டுமே. நாடாளுமன்றத் தேர்தலுக்கல்ல" என்று ஜெயலலிதா அறிக்கை விட்டார். இந்த அறிக்கை இ. கா. கட்சித் தொண்டர்களை மட்டுமன்றி அ. இ. தி. மு. க தொண்டர்களையும் குழப்பத்திலாழ்த்தியுள்ளது.

அ. இ. தி. மு. கவுடனான உறவை தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர்களும் சரி தொண்டர்களும் சரி விரும்பியதில்லை. ஜெயலலிதாவின் கட்டளையிடும் தோரணையும், தன்னைவிட ஆளில்லையென்ற அகங்காரப் போக்கும் அவர்களுக்கு வெறுப்பையூட்டியுள்ளன. இப்போது தொகுதிபகிர்வில் ஏற்கனவே செய்து கொண்ட உடன்படிக்கைக்கு மாறாகக் கருத்துகளை வெளியிடுகிறார்.

இந்திரா காங்கிரசுடன் உறவை முறித்துக் கொண்ட சந்திரசேகர், ஜெயலலிதா பக்கம் தன் கவனத்தைத் திருப்பியுள்ளார். அ. இ. தி. மு. கவுடன் உறவைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார். இது தமிழ்நாடு இ. காங்கிரசுக்குச் சங்கடத்தையும், சந்தேகத்தையும் உருவாக்கியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் ராஜீவ் காந்தியின் அறிக்கை எல்லோரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

"கவர்னரின் அறிக்கையின்றித் தமிழ்நாடு அரசைக் கலைத்தது எனக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது" என்று ஒரு போடு போட்டார்.

இதுவரை காலமும் தமிழ்நாடு அரசு கலைப்புக்குத் தாங்களே காரணம் என்று மார் தட்டிய தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் ராஜீவின் அறிக்கையினால் குழப்பத்திற்குள்ளானார்கள்.

இந்தப் புதிய திருப்பம் ராஜீவின் நெருங்கிய சகாவான சிதம்பரத்துக்குத் திகிலைக் கொடுத்தது. கூட்டு உடைந்து விடுமோவெனப் பயந்தார். தமிழ் நாட்டுக்கு ஓடி வந்தார். பத்திரிகையாளர்களைக் கூட்டினார். "ராஜீவின் பேச்சு தவறாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டது. அவர் அப்படிச் சொல்லவில்லை" என்று சமாதானம் கூறினார்.

தேர்தல் நெருங்க நெருங்க தி. மு. க. - ஜனதா தள் கூட்டிலும் விரிசல் ஏற்பட ஆரம்பித்துள்ளது.

ஜனதா அலை எங்கும் வீசுவதாக ஜனதா தள் தலைவர்கள் தேர்தல் கூட்டமொன்றில் பேசிய பேச்சு நாஞ்சில் மனோகரனுக்குக் கொதிப்பைக் கிளறி விட்டது. உடனே அதற்குப் பதிலடி கொடுப்பது போல் கண்டன அறிக்கை விட்டார். ஜனதா தள் - தி. மு. க கூட்டணியில் ஏற்கனவே இருந்த சிறு வெடிப்பு இப்போது பெரும் விரிசலாக மாறியுள்ளது.

தமிழ்நாட்டில் இரண்டு கூட்டணிகளுக்குள்ளேயும் தொகுதிகள் பகிர்வதில் இழுபறியும், இல்லுமுள்ளும் தோன்றியுள்ளமையும் வெளிப்படையாகத் தெரிகின்றன. தேர்தல் நெருங்க நெருங்க இவை அதிகரிக்குமே தவிர குறைய மாட்டா.

தமிழில் வி. பி.

## விடுதலைக் குழுக்களுக்கிடையே மோதல்

# தென்னாபிரிக்காவில் 37 பேர் மரணம்

தென்னாபிரிக்காவில் விடுதலை கோரும் கறுப்பினக் குழுக்களுக்கிடையே பெரும் பிளவு தோன்றியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கும் - மற்றொரு கறுப்பின குழுவான 'சுலோ சின் கத்தா' சுதந்திரக் கட்சிக்குமிடையே இடம்பெற்ற கைகலப் பொன்றில் 37 பேர் கொல்லப்பட்டார்கள்.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஏ. என். சி என அழைக்கப்படும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆதரவாளர்களாவர். தென்னாபிரிக்காவில் நீண்ட காலம் சிறைவைக்கப்பட்டிருந்து பின்னர் விடுதலை செய்யப்பட்ட நெல்சன்மண்டேலாவே இந்த ஏ.என். சியின் தலைவராவார்.

போட்டிக்குழுவான 'சுலோ சின் கத்தா' குழுவிற்கு தென்னாபிரிக்க சிறுபான்மை வெள்ளையர் ஆட்சி மறைமுக ஆதரவு வழங்கி வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் வெள்ளையர் அரசுக் கெதிரான சாத்வீகப் போராட்ட மொன்றில் ஈடுபட்டிருந்த சமயம், அங்கு அரச பொலிஸாரின் பாதுகாப்புடன் வந்த 'சுலோ சின் கத்தா' குழு மேற்கொண்ட திடீர்த்தாக்குதலிலேயே போராட்டம் நடாத்திக் கொண்டிருந்த 37பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

கடைசியாக கிடைத்த தகவல் ஒன்றின்படி இவ்விரு குழுக்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்கள் தோல்வியுற்றுள்ளதாக அறியப்படுகின்றது.

# பஞ்சாப்பில்சீக்கியதீவிரவாதிகளால் இதுவரை 5 வேட்பாளர்கள் சுட்டுக்கொலை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவென பஞ்சாப் மாநிலத்தில் இருந்து வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளோர் சீக்கியத் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பிலிருந்து வேட்பு மனுத் தாக்கல் செய்தோரில் ஐவர் இதுவரை சீக்கியப் போராளிகளினால் கொல்லப்பட்டு விட்டனர்.

சீக்கியத் தீவிரவாதிகளின் நடவடிக்கையினால் பொதுத் தேர்தல் அங்கு பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவே இந்திய அரசு வேட்பாளர் ஒருவர் இறந்தாலும் தேர்தல் பாதிக்கப்படாமல் நடாத்த அதிகாரமளிக்கும் வகையில் சட்டத் திருத்தமொன்றைக் கொண்டுவர முனைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தீவக அகதிகளைக் குடியமர்த்த மானிப்பாயில் குடிசைகள் அமைப்பு

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் தீவக அகதிகளை குடியமர்த்துவதற்காக குடிசைகள் அமைக்கும் வேலைகள் துரித கதியில் நடைபெறுவதாக மானிப்பாய் வட்டாரப் பொறுப்பாளர் க. சங்கர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

முதற்கட்டமாக 100 குடும்பங்கள் இம்மாதம் 20ஆம் திகதியளவில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வீடமைக்கும் திட்டம் படிப்படியாக விஸ்தரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ப-11)

## கிணற்றில் குதித்துத் தற்கொலை

கப்பூதுவைச் சேர்ந்த குப்புசாமி ராமசாமி (45) என்பவர் கரவெட்டி மக்கள் முன்னணிச் செயலகக் கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது மனைவியும், மகளும், செய்துகொண்ட முறைப்பாட்டை விசாரிப்பதற்கென கரவெட்டி மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் வைத்திருந்தபோதே இவர் இரவு வேளை கிணற்றில் குதித்துத் தற்கொலைசெய்து கொண்டார்.

இவர் தனது தவறான செயல்கள் விசாரணையின் போது வெளிப்பட்டு விடுமென்ற அவமான உணர்வு காரணமாகவே தற்கொலை செய்துகொண்டார் எனவும் அறிய வருகிறது. (71)


### 30 ஆம் நாள் நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில்
01 — 11 — 1969



தமிழீழ மீட்பில்
15 — 04 — 1991

வீரவேங்கை ஸ்ரீபன்
(தம்பையா உமாசிவம்)

மன்னார் அடம்பனில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த ஸ்ரீபன் (தம்பையா உமாசிவம்)
அவர் மாவீரனாக நிற்கும் அன்பு ஸ்ரீபன்
விண்ணில் விளங்கா விரைவில் நீ சென்றதேனோ.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மாமா, மாமி, மருமக்கள்,
மைத்துனர்மார், மைத்துனி.

நெற்புலவு,
பூநகரி.

05029


## மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி அண்மையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது

இப்போட்டியில் முதலாம் இடத்தை 109 புள்ளிகளைப் பெற்ற பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் 52 புள்ளிகளைப் பெற்ற பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் 29 புள்ளிகளைப்பெற்ற இவானந்த விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றன

சிறந்த விளையாட்டு வீரனாக ஜெ. அல்பேட் பாஸ்கரனும், சிறந்த விளையாட்டு வீராங்கனையாக க. அம்பரசியும் தெரிவு செய்யப்பட்டனர். (16)

# பங்களாதேஷில் தொடரும் அனர்த்தம்; பனிப்புயலில் 26 பேர் பலி!

சூறாவளி, கடும் மழை, பூமியதிர்ச்சி ..இந்த வகையில் பனிப் புயலும் இப்போது பங்களாதேஷை தாக்கத் தொடங்கியுள்ளது.

நேற்று முன் தினம் இரவு பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலும், மற்றும் பல மத்திய மாவட்டங்களிலும் வீசிய கடும் பனிப் புயலில் 26 பேர் பலியானார்கள். 13 பேரைக் காணவில்லை. 5000 வீடுகள் சேதமுற்றன.

## கொள்வனவு

யாழ் மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படும் சணலின் விதையை எடுத்த பின்பு எஞ்சியிருக்கும் சணல் தண்டுகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவுசெய்ய முன்வந்துள்ளது.

விவசாயிகள் அறுவடை செய்த சணல் தண்டுகளை தங்கள் பகுதி சமாசச் சேவை நிலையங்களில் கொடுத்துப் பணத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.


### சிறு விளம்பரம்

#### விற்பனைக்கு

அதிசக்தி வாய்ந்த மிக்கவைற் திரவ சவர்க்காரம் வீட்டுச் சலவைக்கும், ஏனைய சுத்திகரிப்பு வேலைகளுக்கும் இலத்திரசிகளுக்கு உதவுகிறது எங்கும் கிடைக்கிறது. மிக்கவைற் - யாழ்ப்பாணம். 05055

#### தேவை

இலுப்பம் விதை, வேப்பம் விதை தேவை. மிக்கவைற் - யாழ்ப்பாணம். 05069



### LONDON EXAMS

Nov. Dec. 1991

C. I. M. A. (I. C. M. A)

I. D. P. M. (Computer)

I. A. B.

COMPUTER - BASIC

வகுப்புகள் 18.5.91 முதல் ஆரம்பமாகின்றன.

விரிவுரையாளர் குழு : சத்தியதாஸ், சிவலிங்கம், மதி, சிவபாதசுந்தரம், சந்தையா, நரேந்திரன், புஷ்பா, ஜோசப்.

மேலும் விபரங்கட்கு:

School of Business Administration

(OLR தேவாலய மேற்குப்பக்கம்)

16, 3வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

05068

## மடு அகதி முகாமில் 5000 பேருக்கு தொற்றுநோய்

# வாராந்தம் மூவர் பலியாகின்றனர்!

மடு அகதி முகாமில் தொற்றுநோய் காரணமாக தற்பொழுது வாராந்தம் சராசரி மூவர் மரணமடைந்து வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அகதி முகாமில் தற்சமயம் 6000 குடும்பங்களைச் சேர்ந்த 30, 000 பேர் இடம் பெயர்ந்து தங்கியுள்ளனர்.

இந்த 30, 000 பேரில் 5000 பேர் தொற்று நோய்களுக்கு உள்ளாகி நோயாளர்களாக உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

மடு அகதி முகாமில் இடம் பெயர்ந்து தங்கியுள்ளோருக்கு போதிய மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை எனவும், மருந்து வகைகளுக்கு முகாமில் பலத்த பற்றாக்குறை நிலவுவதாகவும் அங்கிருந்து யாழ் திரும்பிய யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முரசொலிக்குத் தெரிவித்தனர்.

இராணுவ தாக்குதலையடுத்து பிரான்ஸ் வைத்தியர் குழுவைச் சேர்ந்த ஒரு வைத்தியரும், ஒரு தாதியும் மட்டுமே அங்கு தங்கியுள்ளனர். அகதி முகாமில் மலேரியா மற்றும் தொற்று நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. (ப-11)

## 'துளசி' கூட இருந்தால் ஆயுள் நீண்டு செல்லும்

நீண்ட காலம் வாழ ஆசைப்படுபவர்களுக்கு எளிய வழி ஒன்று உண்டு. துளசியில் இருந்து வீசும் காற்றை சுவாசித்து வந்தால் போதும் ஆயுட்காலம் நீண்டு செல்லும். தவிர துளசி பல்வேறு நோய்களைக் குணப்படுத்துவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் துளசியை மென்று தின்ன வேண்டும். சளியும், இருமலும் உள்ளவர்கள் துளசி போடு சிறிது மிளகு சேர்த்து காலை மாலை இரு வேளைகளிலும் சாப்பிட வேண்டும். தேள் கடித்த இடத்தில் துளசிச் சாற்றைப் பிழிந்தால் விஷமும், வலியும் பறந்து போகும். இதயநோய்க்கு இது நல்ல மருந்து. துளசி மணியைக் கழுத்தில் அணிந்தால் பூச்சி கடிக்காது. துளசிச் செடிகள் இருக்கும் இடத்தில் பூச்சிகள் கிட்ட நெருங்காது.

## மடு சென்ற பல்கலை மாணவர் குழு நேற்றுக் காலை யாழ் திரும்பியது

மடு அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்கு உதவி செய்யவென கடந்த வாரம் மடுவுக்குச்சென்ற யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் குழு நேற்றுக் காலை யாழ் திரும்பியது.

மலகூட வசதி ஏற்படுத்தல் குப்பைக்கிடங்குகள் அமைக்கும் வேலை மற்றும் சூழவுள்ள பகுதிகள் துப்புரவாக்கும் வேலைகளில் இவர்கள் அங்கு ஈடுபட்டனர்.

மடுவில் தங்கியுள்ளோரில் 5 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2000 பால் மா பக்கற்றுக்களையும் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு வழங்கினர். (ப-11)

## மாநகரசபை மேயர் தெரிவு நாளை கொழும்பில் இடம்பெறும்

ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றியுள்ள 193 உள்ளூராட்சிச் சபைகளுக்குமான மேயர் மற்றும் தலைவர்கள் தெரிவு நாளை இடம்பெறவுள்ளது.

நாளை வியாழன் கொழும்பில் இடம்பெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வைத்து இத்தெரிவு இடம்பெறவுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் மேயர் தெரிவும் நாளைய தினம் இடம்பெறும்.

## கோப்பாயில் உயர்தர வகுப்பு

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் க. பொ. த. (உயர் தர) விஞ்ஞானம், வர்த்தகம், கலைப் பிரிவுகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 20ஆம், 21ஆம் திகதிகளில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார்.

## வடக்குகிழக்கில்எம்.எஸ்.எப்.சேவை; நாளை இறுதிமுடிவு எடுக்கப்படும்

எம் எஸ் எப் பிரெஞ் வைத்தியக்குழு இலங்கையில் தொடர்ந்தும் நடமாடும் மருத்துவ சேவையைத் தொடர்வதா, இல்லையா என்பதுபற்றி நாளை கொழும்பில் நடைபெறவுள்ள பிரெஞ் உயர்மட்டக் குழுக்களுக்கிடையிலான கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப் படவுள்ளது.

இக் கூட்டத்தில் எடுக்கப் படும் இறுதி முடிவுக்கமையவே எம். எஸ் எப் தனது சேவையை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப- 11)

## இளைப்பாறியவுடன் ஓய்வூதியம் நடவடிக்கைக்கு பணிப்பாளர் பணிப்பு

இளைப்பாறியவுடன் தாமதமின்றி ஓய்வூதியத்தை வழங்கக் கூடிய வகையில் ஆசிரியர்களின் ஓய்வூதிய பதிவுகளை முற்கூட்டியே தயாரித்து வைக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

வரலாற்றுத்தாள்கள் ஒழுங்காகப் பேணப்படாததனாலேயே ஆசிரியர்களின் ஓய்வூதியம் வழங்குவது காலதாமதமாகின்றதனால் இவ்வரலாற்றுத் தாள்களை ஒழுங்காகப் பேண நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணித்துள்ளார்.

இவ்வரலாற்றுத்தாள்கள் ஆசிரியர்கள் விடயத்தில் 1.4.70 தொடக்கம் பேணப்படல் வேண்டும். என்றும் இத்திகதிக்கு முன்னுள்ள சேவைக் காலத்தை உறுதிப்படுத்தி ஓய்வூதிய விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் என்று அவர் பணித்துள்ளார்.

சேவை நீடிப்பு வழங்குவதற்குக் குறைந்த பட்சம் இரண்டு வருடங்கட்கு முன்னராவது உடன் வரலாற்றுத் தாள்கள் பேணப்படுதல் வேண்டும். அத்துடன் 54 வயதை அடைந்தவுடன் தற்காலிக ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சத்தியக் கடதாசி அவ்வாசிரியரினால் பூரணப்படுத்தி யாழ் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பப்படல் வேண்டும் எனவும் பணிப்பாளர் பணித்துள்ளார். (78)

## இரசாயன ஆயுதப் பயன்பாட்டை நிறுத்தப் போவதாக புஷ் அறிவிப்பு

இரசாயன ஆயுத பயன்பாட்டை நிறுத்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

பதில் நடவடிக்கைகளுக்குக் கூட இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என அமெரிக்கா தனக்குத்தானே கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டுள்ளதாகவும் புஷ் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்கப் படையினரிடமுள்ள இத்தகைய ஆயுதங்களை அழித்தொழிக்குமாறு உத்தரவிட்டுள்ள புஷ், 10 ஆண்டுகளுக்குள் முழு இரசாயன ஆயுதங்களையும் களைவது என்ற தீர்மானத்திற்கமையவே இந்த முடிவு எடுக்கப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி புஷ் கடந்த ஜூன் மாதம் வாஷிங்டனில் சோவியத் தலைவரைச் சந்தித்தபோது இரசாயன ஆயுதங்களை 5000 தொன்களாகக் குறைத்து 2002ஆம் ஆண்டளவில் முழு இரசாயன ஆயுதங்களையும் அழிப்பதென உடன்பாடு ஏற்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கம்பன்கோட்டத்தில்நாடக அரங்கு; காட்சியும், கானமுமாக புகழ் நாடகங்கள்

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பத்தாண்டு நிறைவு மூன்றாவது நிகழ்ச்சித் தொடரில் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாடக அரங்கு இடம்பெறவுள்ளது.

அரங்கில் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையுரையும், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ பாலசுந்தரம் தொடக்கவுரையும் நிகழ்த்துவர்.

நாடக கலாஜோதி வி.என். செல்வராஜ், நாடக ஜோதி எம். கலாரத்தினம், நடிக கலாமணி வி. செல்வரட்ணம் ஆகியோர் தமது 'கோவலன்' 'பூதத்தம்பி', 'வள்ளிதிருமணம்', 'நல்லதங்காள்', 'சத்தியவான் — சாவித்திரி', 'அரிச்சந்திர மயான காண்டம்' புகழ் நாடகங்களிலிருந்து முக்கிய பகுதிகளை 'காட்சியும் கானமுமாக' நாடக அரங்கில் மேடையேற்றவுள்ளனர்.

## ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் திறந்த இருதய சத்திரசிகிச்சை

கோட்டே ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் திறந்த இருதய சத்திரசிகிச்சை ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இங்கு இந்த சத்திரசிகிச்சை ஆரம்பிக்கப்படும்.

ஒல்லாந்து, யப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இதற்கான உபகரணங்கள் தற்பொழுது தருவிக்கப்பட்டு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் பொருத்தப்பட்டு வருகின்றது.

இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்ளவென வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற 8 சத்திரசிகிச்சை நிபுணர்கள் ஜூலை மாதம் கொழும்பு வரவுள்ளனர். இவர்கள் ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் தொடர்ந்து பணிபுரிவர். தற்பொழுது அமெரிக்காவில் கடமைபுரியும் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் தேரம் மகேந்திரா இப்பிரிவுக்குப் பொறுப்பாகவிருப்பார்.

## மட்டுப்படுத்தப்பட்டசிற்றூர்திசேவை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

யாழ் குடாவில் சகல இடங்களுக்குமான சிற்றூர்திசேவைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் பருத்தித்துறை, சாவகச்சேரிப் பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சிற்றூர்தி சேவைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. (74)

## பல்லு உடைந்துவிழுந்தால்கூட கவலைப்பட வேண்டியதில்லை

உடலின் அவயவமொன்றில் உடைந்த எலும்பை பொருத்துவது போல் முரசிலிருந்து கழன்று விழுந்த பல்ஒன்றையும் மீண்டும் அதேயிடத்தில் பொருத்தி செயற்பட வைக்க முடியும்.

சில தினங்களுக்கு முன்னர் சென்னை வானொலியில் இடம் பெற்ற வைத்தியக் குறிப்பில் இதுபற்றி மேலும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

விபத்தின் போது அடிபட்டு பல் உடைந்தால் 6 மணி நேரத்துக்குள் அப்பல்லுடன் பல் வைத்தியரை அணுகினால் அவர் அதனைத் துப்புரவுசெய்து மீண்டும் அதே ராக்கெட்டில் பொருத்திவிடுவார்.

பல்லின் வேர் அல்லது நுனிப் பகுதி உடைந்திருந்தால் கூடக்கவலைப்படத் தேவையில்லை. அவற்றை நிரைப்படுத்தி மீண்டும் ஒட்டக்கூடிய ஏற்பாடுகள் கூட தற்பொழுது உண்டாம்.

## 30 வீதம்கூடுதல் மாணவர்களை சேர்க்கும் திட்டத்திற்கு

# பல்கலைக்கழகங்கள் கடும் எதிர்ப்பு!

1990-91 கல்வியாண்டுக்கு 30வீதம் கூடுதல் மாணவர்களைச்சேர்த்துக்கொள்ளும்பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் திட்டத்திற்கு பல்கலைக்கழகங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தற்போது இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு இருக்கும் அனைத்து வசதிகளும், நிதிநிலைமைகளும் பற்றாக்குறையாகவே உள்ளன. இந்நிலையில் கூடுதலான மாணவர்களின் கல்விக்கு பல்கலைக்கழகங்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-11)

## தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட 25 இராணுவத்தினரைக் காணவில்லை

நேபாளத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 25 இராணுவத்தினர் காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கடத்தப்பட்டார்களா அல்லது தாங்களாகவே மறைவானார்களா என்பது குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை நேபாளத்தில் 15 தொகுதிகளுக்கான தேர்தல் மீண்டும் நடாத்தப்படவுள்ளது.

## முல்லைத்தீவு கச்சேரியில் பென்சன் பெற நடவடிக்கை

முல்லைத்தீவு செயலக பென்சனியர்களது ஒய்வூதியத்தை வழங்க முல்லைத்தீவு செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இச்செயலகத்தில் ஒய்வூதியத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு விரைவில் வழங்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். 38

## மும்மொழிச் சொற்தொகுதி விரைவில் வெளியிடப்படும்

அரசகரும மொழிகள் திணைக்களம் முன்னர் வெளியிட்ட இரு மொழியிலான முகாமைத்துவ சொற்தொகுதியை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடவுள்ளது

இச்சொற் தொகுதிக்கு ஆங்கில சொற்களையும் அனுப்பவிரும்பும் அரச, கூட்டுறவு, தனியார் துறையினர் எவரும் தாம் விரும்பிய சொற்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு அரசகரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## கரன்ஸி நோட்டுக்கள் கடத்தல் குவைத் பிரஜை அகப்பட்டார்

ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு கரன்ஸி நோட்டுக்களை கடத்திச் செல்ல முயன்ற குவைத் நாட்டு பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டார்.

இவரிடமிருந்து அமெரிக்க டொலர்கள், குவைத் டினார்கள், சவூதி றியால்கள், பஹரேன் டினார்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

தமது பிரயாணப் பைக்குள் வைத்து இவற்றை மறைத்துக் கொண்டு செல்ல முயன்றபோதே சிக்கினார் 38

### பனங்கட்டி தொழிற்சாலை

பண்டத்தரிப்பு தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பதநீரிலிருந்து பனம் கட்டி தயாரிக்கும் நிலையம் ஒன்றை அண்மையில் திறந்துள்ளது

இந்த நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனம் கட்டிக்கு நல்ல வரவேற்பு இருப்பதாகவும், பலருக்கு இதனால் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 13

● கரும்புலிகள் எழுச்சி கூட்டத்தில் ஆஞ்சிநேயர்

## போய் வருகிறேன் பழைய வரலாறு போகிறேன் இது புலிகள் வரலாறு

''கடற் கரும்புலிகளின் வீரமரணங்கள் உலகில் வாழும் அடக்கப்பட்ட மக்களின் விடிவுக்கு வழி சொல்கிறது. வெறுமனே வாயால் சொல்லாது செயல் வடிவாக இவ்வீரர்கள் உலகிற்கு உணர்த்துகிறார்கள்.''

இவ்வாறு நேற்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கடற் கரும்புலிகளின் எழுச்சிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் மூர்த்தி தெரிவித்தார்;

''இவ் எழுச்சி நாளில் நாம் வீட்டுக்கொரு மகனை போராட்டத்திற்கு வழங்க; ஏன் குடும்பமாக போராட்டத்தில் இணைவதாக உறுதி பூணுவோம்''

இதுவே நாம் அவர்களுக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாகும் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

பல்லாயிரக் கணக்கான மக்கள் எழுச்சி கொண்டு கலந்து கொண்ட இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட மக்கள் உறவு முன்னெடுப்பு பொறுப்பாளர் ஆஞ்சிநேயர் உரையாற்றுகையில்.

உலகில் நடைபெறும் பல ஆய்வுகளில் விடுதலைப் புலிகளின் தியாகத்தை ஆய்வு செய்ய முடியாது. அந்த அளவுக்கு அவர்களின் தியாகம் உலகை வியக்க வைத்துள்ளது.

பழைய வரலாறு போர் முனைக்கு செல்லும் வீரன் போய் வருகிறேன் எனக் கூறுவது விடுதலைப்புலிகளின் புதிய வரலாறு போகிறேன் என்று கூறுவது இது தமிழருடைய வரலாற்றில் புதிய வடிவம்

இப்புதிய வரலாற்றை கரும் புலிகள் எழுதுகிறார்கள் .70

## ஆப்கான் கிளர்ச்சியாளருக்கு அமெரிக்கா உதவி நிறுத்தம்!

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள முஜாகுதீன் கெரில்லாக்களுக்கான உதவியை அமெரிக்க அரசு திடீரென நிறுத்தியுள்ளது.

முஜாகுதீன் கெரில்லாக்கள் ஆப்கான் அரசை தொடர்ந்து எதிர்ப்பதில் பலனில்லை எனவும் ஆப்கானுக்கு உதவும் ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை அமெரிக்காவுடன் சீரடைந்து வருவதாலும் இவ்வுதவியை நிறுத்த அமெரிக்கா முடிவெடுத்துள்ளது.

கடந்த பல வருடங்களாக முஜாகுதீன் கிளர்ச்சியாளர்களுக்கு பணம் மற்றும் ஆயுத உதவியை அமெரிக்கா வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஹாட்லி கல்லூரி முன்னாள்அதிபர் காலமானார்

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின்முன்னாள் அதிபர் கே ஏகாம்பரம் நியூஸிலாந்தில் காலமானார். ஒய்வு பெற்றபின்னர் ஸாம்பியா சென்று பின்னர் நியூஸிலாந்தில் பணிபுரிந்தார். 38

தமிழர் புனர்வாழ்வுக்கழக

## நிவாரண வைத்தியக் குழுக்கள் வன்னிப்பகுதிக்குச் சென்றன

தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் தலைமையில் நிவாரணப்பணிகள் குழு ஒன்றும், வைத்தியப்பணிகள் குழு ஒன்றும், வன்னிப்பகுதியில் உள்ள அகதிகளின் நிவாரணப் பணிகளையும், மருத்துவ சுகாதாரப் பணிகளையும் மேற்கொள்வதற்காக சென்ற சனிக்கிழமை வன்னி சென்றன

நிவாரணப் பொருள்கள், மருந்துவகைகள் உடனடியாக விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சூட்டுக்காயத்துக்கு சிகிச்சை இளைஞர் கொழும்பில் கைது

துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் கொழும்பில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த வடபகுதி இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவரில் சந்தேகம் கொண்ட ஆஸ்பத்திரி நிர்வாகம் கொடுத்த தகவலையடுத்து கொம்பனித்தெரு பொலிஸார் இவரைக்கைது செய்துதாகவும் அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்து, அங்கு பலத்த பாதுகாப்புடன் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொடுத்த தகவலையடுத்து மேலும் ஐவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

## கலையரங்கமாக மாறும்

யாழ் கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள சங்கிலியன் திரையரங்கு, கலையரங்காக மாற்றம் பெறவுள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இக் கலையரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 6 மணியிலிருந்து 8 மணிவரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 47

### ஒரே இடத்தில்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெவ்வேறு இடங்களில் தங்கியுள்ள அகதிகளை ஒரே இடத்தில் தங்கவைத்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

சங்கானை உதவி அரச அதிபரின் நேரடிக் கண்காணிப்பில் இந்த முகாம் அமைக்கப்படும். 12

### யானைகள்...

தோட்டப்பயிர்களையும், தென்னங் கன்றுகள், வாழை மரங்கள், வீடுகள் என்பன வற்றையும் சேதமாக்கி வருகின்றன.

இந்த யானைகளை விரட்டும் நடவடிக்கைகளில் இரவு நேரம் இக்கிராம மக்கள் குழுவாக இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ப-6

### பிரிட்டிஸ்...

பிரிட்டிஷ் தூதுவர் ஒரு போதைவஸ்து கடத்தற்காரர் என நிக்வெல எம் பியான எஸ். ஆர் பியதிஸ பாராளுமன்றத்திலும் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### நவசமசமாஜக்கட்சி...

வித்துள்ளது.

இச்சம்பவம் கெக்கிராவ பகுதியில் நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். 38

### வீரமரணமடைந்த..

சிவம் - கந்தையா ரவிச்சந்திரன் மன்னார், ஈஸ்வரன் - பெருமாள் சசிக்குமார் மன்னார், லெசுமிஸ் - நேசராசா உதயகுமார் தும்பன்கேணி, கிரோ - இராமகிருஷ்ணன் ஜெயராசா நீர்வேலி, லோகா - சென்பற்றிக்ஸ் டேவிட் அரியாலை, தேவா - ஜசிரிஸ் செல்டன் தலைமன்னார், புஷ்பகாந்த் - ஐயாத்துரை சிவதர்சன் முல்லைத்தீவு, பீலிக்ஸ் - சுந்தரலிங்கம் சாந்தகுமார் முல்லைத்தீவு, மனோஜ் யாழ்ப்பாணம், விக்கா - இராசரத்தினம் சுதாகரன் கிளிநொச்சி, அருள் - முருகையா செல்வச்சந்திரன் நாவற்குழி. அன்பன்,

---


## காலமானார்

### சின்னத்துரை செல்வநாயகம் M.B.E;P.J.K

(மலேசிய பென்சனர்)

மலேசியாவில் உயர்கல்வி அதிகாரியாக பணிபுரிந்து ஒய்வு பெற்ற திரு. சின்னத்துரை செல்வநாயகம் M.B.E;P.J.K. சிவபதம் அடைந்துவிட்டார் அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக்கணவரும், விசாலாம்பாள் அரியகுட்டியின் மைத்துனரும், காலஞ்சென்ற பத்மாவதி, புஷ்பா (ஒய்வு பெற்ற முன்னைநாள் ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி), டாக்டர். செல்வேந்திரா (அவுஸ்திரேலியா), அர்ச்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், விஜயலட்சுமியின் வளர்ப்புத்தந்தையும், டாக்டர் S.S சோமசுந்தரம், மணி (அவுஸ்திரேலியா), விமலா (அவுஸ்திரேலியா), லோகதாசன் (இங்கிலாந்து), பேரின்பநாயகம் (பொலிஸ் அத்தியட்சகர், கொழும்பு), லோகேந்திரராணி, தயாநிதி, புவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், விஜயாஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), சியாமளா, முரளீதரன், அஜீத், ரொமேஷ், சாவித்திரி, மாலதி, சித்ரா, மலர் மது, ராதிகா, சர்மிலா, கவிதா, அரவிந்தன், கார்த்திகா, விஜயந்தி, சாந்தி, அன்ரு ஆகியோரின் பாட்டனும், யாழினி, ஜனகன் ஆகியோரின் பூட்டனும், பாலசிங்கம் (சித்ராலயா உரிமையாளர்), சிறீகாந்தராஜா (பதிவாளர், யாழ் மேல்நீதிமன்றம்) ஆகியோரின் அபிமானத்தந்தையுமாவார், அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லமான 'ஸ்ரீசைலம்' 151 கோவில் வீதி, நல்லூரில் 15-05-91 இன்று மாலை 3 00மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் அக்கினியுடன் சங்கமமாகும்,

தகவல்:

151, கோவில் வீதி,
நல்லூர்.

புஷ்பா செல்வநாயகம்

05075



ஆரம்ப சுகாதார கவனிப்பு அமைப்பாளர் / உதவி அமைப்பாளர்

## பதவிகளுக்கான வெற்றிடங்கள்

உடுப்பிட்டி : கரணவாய் வடக்கு

விண்ணப்பகாரருக்கு இருக்க வேண்டிய தகைமைகள்:

1. கல்வி — க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சுகாதாரம், கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. சுகாதாரப் பயிற்சி; சுகாதாரத்தில் போதிய பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். (ஆரம்ப சுகாதார கவனிப்பு) முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. சுகாதார வேலையில் அனுபவம் இருத்தல் வேண்டும். (முக்கியமாக வெளிக்கள வேலையில்)
4. துவிச்சக்கர வண்டியில் சென்று கடமை புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. வயதெல்லை - 25 மேற்பட்டவர்கள்.
7. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் அல்லது அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
8. விண்ணப்ப முடிவுத் திகதி - 20-05.1991
9. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி!

செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

05078


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ், (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி" பில்டிங் இல் உள்ள அச்சகத்தில் 15.05.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.